## மேலமாயனூர் பகுதி புறம்போக்கு நிலங்கள்.

*400 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், மேலமாயனூர் கட்டளைப் பகுதிகளில் உள்ள ஆற்றுப் புறம்போக்கு நிலங்களை நீண்ட காலமாக அனுபவித்து பயிரிட்டு வரும் தாழ்த்தப்பட்ட விவசாயிகளை நிலத்தை காலி செய்து ஒப்படைக்க வேண்டுமென 1973 ஜூலை மாதம் நோட்டீசு அனுப்பப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், இதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் சொல்லியிருக்கிறார்கள். அந்த விவசாயிகள் கரூர் நீதி மன்றத்தில் வழக்குகள் போட்டிருக்கிறார்கள். இல்லை என்று பதில் சொல்வதற்கு என்ன காரணம் ? சரியான விவரம் அனுப்பப்படவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: என்னிடம் இருக்கிற தகவலைத்தான் தெரிவித்தேன். அந்த ஆற்றுப் படுகையில் குகநாத நாடார் ஒருவருக்குத் தான் நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது என்று அரசுக்குத் தகவல் இருக்கிறது. அங்கு இருக்கிற அரிசன மக்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்படவில்லை என்ற தகவலும் இருக்கிறது. மேற்கொண்டு ஏதாவது தகவல் அங்கத்தினர் அவர்கள் தந்தால், அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அந்த ஊர் என்னுடைய தொகுதியைச் சேர்ந்தது. அங்கும் கட்டளை கிராமத்திலும் ஏராளமான தாழ்த்தப்பட்ட மக்கள் படுகை நிலத்தை நீண்ட காலமாகச் சாகுபடி செய்து வருகிறார்கள். அவர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். மேலமாயனூர், கட்டளைப் பகுதிகளில் அவர்கள் வெளியேற்றப்பட்டிருப்பது உண்மை. பொதுப் பணித் துறை பொறியாளரையும் இது சம்பந்தமாகச் சந்தித்ததும் உண்மை. இப்பொழுதுதான் கோர்ட்டுக்குச் சென்று வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. இந்த விவரத்தைக் கேட்டு இனி மேலாவது அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அரசுக்கு அப்படி அதிகாரிகள் தவறான தகவல்களைத் தந்திருப்பார்கள் என்று நினைக்கவில்லை. அங்கத்தினர் சொல்வது உண்மையாக இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும். வந்திருக்கிற தகவல்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நோட்டீஸ் கொடுத்து அப்புறப்படுத்தப்பட்டதாகத் தகவல் இல்லை. அவர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்படவில்லை. பொதுவாக ஆற்றுப்படுகை நிலங்களை

1974 மார்ச் 13]

யாராவது ஆக்கிரமித்துக் கொண்டிருந்தால், அவர்களை அப்புறப்படுத்த வேண்டும் என்று அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 1969-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3-ஆம் நாளில் பொதுப் பணித் துறையிலிருந்து ஆணை போயிருக்கிறது. ஆனால், இதுவரையில் இவர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்படவில்லை, குகநாத நாடார் இன்னும் காலி செய்யவில்லை என்ற தகவல் இருக்கிறது. அங்கத்தினர் சொன்ன தகவல் உண்மையானால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆ. பரந்தாமன் : ஆற்றுப்படுகைகளில் ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருந்தால் உடனே அவர்களை வெளியேற்ற வேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். தமிழ் நாட்டிலுள்ள அத்தனை மாவட்ட ஆட்சித் தலைவர்களும் ஏற்கனவே ஆக்கிரமிப்பு செய்துகொண்டிருப்பவர்களுக்கு பட்டா கொடுத்து விடலாம் என்ற பிரபோஸலை அரசாங்கத்திற்கு அனுப்பியிருப்பதாகத் தெரியவருகிறது. ஆகவே, அரசு இது குறித்து ஃபைனல் டெஸிஷன் எடுக்கவேண்டும். அருள்கூர்ந்து அதைப் பற்றி பரிசீலிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆட்சேபனை இல்லாத ஆக்கிரமிப்பாக இருந்தால் பட்டா கொடுப்பது பற்றி எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. பரிசீலிக்கலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஆற்றங்கரையின் ஓரத்திலிருப்பவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்து அவர்களை அப்புறப்படுத்த வேண்டும் என்றால், அவர்களுக்கு அதற்குப் பதிலாக வேறு இடம் கொடுப்பதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படி ஆற்றுப்படுகையில் ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிற விவசாயிகள் வேறு இடங்கள் காட்டுவார்களேயானால், அது காலியாக இருந்தால் அரசாங்கம் தரும். இல்லையென்றால் அரசாங்கம் நிலத்தை உற்பத்தி செய்து தர முடியாது.

திரு. எ. சுப்பிரமணியம் : ஆட்சேபனைக்குரிய ஆற்றுப்படுகையாக இருந்தால் பட்டா மறுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். ஆட்சேபனைக்குரியது என்பதற்கான விளக்கம் என்ன ? ஆட்சேபனைக்குரியது என்று யார் தீர்மானிப்பது, எந்த அடிப்படையில் தீர்மானிப்பது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எது ஆட்சேபனைக்குரியது, எது ஆட்சேபனைக்குரியது இல்லை என்பதற்கெல்லாம் போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர்ஸ் இருக்கின்றன. அங்கு இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர், பொதுப் பணித் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் தீர்மானிப்பார்கள். ஆட்சேபனைக்குரியதாக இருக்குமானால் அப்புறப்படுத்தத்தான் வேண்டும். அதற்கு அங்கத்தினர்கள் ஒத்துழைக்க வேண்டும். ஆட்சேபனைக்குரியதில்லை என்று சொன்னால் அதைப் பட்டா செய்து கொடுப்பதில் அரசுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது.

[1974 மார்ச் 13

திரு. கே. என். குமாரசாமி: ஆற்றுப் படுகை, குளத்தினுடைய படுகை, கால்வாய் புறம்போக்கு இதுபோன்ற ஏரியாக்களில் பட்டா கொடுக்கக்கூடாது என்று அரசாங்க விதிமுறையிலே இருக்கிறது. அதையும் மீறி பல இடங்களில் ஆக்கிரமித்து குடியேறியிருக்கிறார்கள். அதைப் பற்றி அதிகாரிகள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதில்லை. புகார் சொன்னாலும் அந்தப் புகாரின் பேரில் நடவடிக்கை எடுப்பதற்கு எந்தவிதமான ஆதாரங்களையும் அவர்கள் உண்டாக்குவதில்லை. இதன் மூலம் குளம் புறம்போக்கு, கால்வாய் புறம்போக்கு போன்ற பகுதிகளில் பாசனத்தை சரியாகச் செய்வதற்கு வாய்ப்பு இல்லை. விவசாயத்திற்கு தண்ணீர் போவதற்கு இடைஞ்சல் ஏற்படுகிறது. எனவே, அரசு இது குறித்து தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அங்கத்தினர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதுதான் அரசின் கொள்கை. அதை வைத்து ஆக்கிரமிப்பு செய்து கொள்வதினால் விவசாயம் அல்லது வேறு வேலைகளுக்கு குந்தகம் ஏற்படுமேயானால் நிச்சயம் அரசு அப்புறப் படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். குப்பல் இராமகிருஷ்ணன்: மதுரையில் ஆற்றங்கரை ஓரத்தில் ஏராளமான குடிசைகள் போடப்பட்டு, ஆற்றங்கரையிலிருந்து அவர்களை அப்புறப்படுத்த வேண்டும் என்று நகரசபையிடம் பல தடவை முறையிட்டும் அப்புறப்படுத்தப்படவில்லை. பிறகு வெள்ளம் வந்தபொழுது எல்லாக் குடிசைகளும் அடித்துக்கொண்டு போகப்பட்டது. இப்பொழுது கரை நன்றாக அழகாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். இனிமேலாவது அம்மாதிரி ஆற்றங்கரையில் குடிசைகள் போடுவதை தடுப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மதுரையில் வெள்ளம் வந்து ஆற்றுப் படுகையிலுள்ள குடிசைகள் அப்புறப்படுத்தப்பட்டன என்று சொன்னார். அதுமாதிரி மற்றப் பகுதிகளிலும் வெள்ளம் வந்து குடிசைகளைப் பாழாக்க வேண்டும் என்று நினைக்க வேண்டியதில்லை. அரசு சட்டத்தின் துணைகொண்டு செய்யலாம் என்று நினைக்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: ஆற்றுப் புறம்போக்கு, மந்தைப் புறம்போக்கு, நத்தம் புறம்போக்கு என்று கிராம அதிகாரிகளின் அடங்கலில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அப்படியிருக்கிற நிலங்களில் பல காலமாக விவசாயம் நடந்து கொண்டிருக்கிறது. அவர்களுக்குப் பட்டா கொடுப்பதற்கு ஆட்சேபனை இருக்க வேண்டியதில்லை. அதிகாரிகளுடைய ரிகார்டில் அப்படிச் சொல்லியிருந்தாலும், அவர்கள் அப்படி விவசாயம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டு பல வருஷங்களாகப் பல இடங்களில் விவசாயம் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அம்மாதிரி அடங்கலில் இருக்கிற ரிகார்டு எப்படியிருந்தாலும் கூட, உண்மையாகவே பல நாட்களாக அவர்கள் விவசாயம் செய்ய அந்த நிலங்களைப் பயன்படுத்திக்கொண்டிருந்தால், அந்த உண்மையை ஆராய்ந்து, அம்மாதிரி இருக்கிற நிலங்களை அவர்களுக்கே பட்டா செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

1974 மார்ச் 13]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆற்றுப் படுகை ஓரத்தில் இருக்கிற ஆக்கிரமிப்புக்களை அப்புறப்படுத்துவது பற்றித்தான் கேள்வி. பட்டா கொடுப்பதைப்பற்றி வருவாய்த்துறை அமைச்சர் அவர்களைக் கேட்க வேண்டும்.

பெரணமல்லூர் நெடுங்குளம் பகுதிகளுக்குப் பாசன வசதி.

*401 விஞ—திரு பூ. எட்டியப்பன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

வடார்க்காடு மாவட்டம், வந்தவாசி தாலுக்கா பெரணமல்லூர் நெடுங் குளம் பிர்க்கா நிலங்களுக்கு செய்யாற்றிலிருந்து பாசன வசதி கொடுக்க விண்ணமங்கலம் சமீபம் தடுப்பு அணை சம்பந்தமாக 1969ல் ஆய்வு செய்யப்பட்ட திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: வந்தவாசி தாலுக்கா பெரணமல்லூர் நெடுங்குளம் பிர்க்காக்களில் உள்ள ஏரிகளுக்கு செய்யாற் றிலிருந்து பாசன வசதி அளிக்கும் திட்டம் ஏற்கெனவே ஆய்வு செய்யப்பட்டது. தண்ணீர் பற்ருக்குறை காரணமாக செய்யாற்றின் கீழ் உள்ள ஆயக்கட்டு நிலங்கள் முழுமையாகப் பயன்பெற முடியாத நிலை உள்ளது. ஆகையால் மேற்சொன்ன திட்டம் தற்காலிகமாக தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

திரு. பூ. எட்டியப்பன்: இந்தத் திட்டம் இன்று நேற்று அல்ல. வெள்ளையன் ஆண்ட காலத்திலிருந்தே நீண்ட பல நாட்களாக கோரிக்கையில் இருந்து வருகிறது. இதனுல் மூன்று போகங்கள் பாசன வசதி ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதுகுறித்து ஆய்வு செய்யப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. தண்டறை அணைக்கும் இதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. கமண்டலா நதியில் அது இருக்கிறது. செய்யாற்றுப் பாசனத்திற்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாது. ஆகவே, அரசு இதை உடனடியாகக் கவனித்து ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் தண்டறை அணையைப் பற்றிக் குறிப்பிடவில்லை. செய்யாற்றுப் பாசனத்தின் கீழ் இருக்கும் ஆயக்கட்டுகள் முழுவதும் பாசன வசதி பெறவில்லை என்ற தகவல் அரசுக்கு இருக்கிறது. ஏற்கனவே இருக்கிற ஆயக்கட்டுகள் பாசன வசதி பெறுமல் இருக்கும்பொழுது புதியதாக நிலங்களைச் சேர்த்து பாசன வசதி செய்துகொடுப்பது இயலாத காரியம் என்பதால் இது தற்காலிக மாக தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. பின்னுல் அதைப் பரிசீலிக்கலாம்.

திரு. கே. எ. வகாப்: செய்யாற்றுக்குக் குறுக்கே ஆரணி அருகே ஒரு அணைக்கட்டு கட்டி பாசன வசதி செய்து வருகிருர்கள். சுமார் 100 ஆண்டு காலமாக அந்த அணை இருக்கிறது. அந்த அணையை அபிவிருத்தி செய்தால் வந்தவாசி தாலுகாவில் வட ஆற்காடு மாவட்டத்தில் உற்பத்தியைப் பெருக்க முடியும். ஆகவே, செய்யாற்றில்